Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 21 [05-07-98] திங்கட்கிழமை ஓசை 137

## அமைய, தற்காலிக சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க தீர்மானம்

1992-04-01 ஆம் திகதிக்கு முன்பு சிற்றூழியர் தரங்கட்கு ஆட்சேர்க்கப்பட்டு இற்றை வரை தொடர்ச்சியாக சேவையிலுள்ள அமைய, தற்காலிக பதில் பணியாயாளர்களுக்கு 1993-05-01 ஆம் திகதியிலிருந்து நிரந்தர நியமனங்கள் வழங்குவதென சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது. ஆனால் இவர்கள் பின்வரும் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். ★ இப்போது ஊழியர் கோப்பில் வெற்றிடமுள்ள ஒரு நிரந்தர பதவியில் தொடர்ச்சியாகக் கடமைகளை நிறைவேற்றியிருக்க வேண்டும். ★ அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும். 1992-04-01 ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ எழுதுநர் அல்லது அதையொத்த தரங்களில் ஆட்சேர்க்கப்பட்டு இற்றைவரை தொடர்ச்சியாகத்

6ஆம் பக்கம் பார்க்க)

## 'றுகுணு' பொருள்கள் காங்கேசனில் பறிப்பு

(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்ட அத்தியாவசியப் பொருள்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்துநிற்கும் ''றுகுணு'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருகிறது.

கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவில் இருந்து காங்கேசன்துறை கடற்படைத் தளத்தினூடாக றுகுணு கப்பல் கப்டனுக்கு கிடைத்த வானொலித் தகவலைத் தொடர்ந்து இக் கப்பலில் உள்ள பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 9.00 மணி முதல் பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாக நேற்றுப்பிற்பகல் எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்கள் அனைத்தும் மேற்படி துறைமுகத்தில் உள்ள களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு வருகிறது. இக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் இன்றுடன் பூர்த்தியடையும் என்று கூறப்படுகிறது. இறக்கும் வேலைகள் இன்றுடன் பூர்த்தியடைந்தாலும் கூட ''றுகுணு'' கப்பலை கொழும்புக்கு திருப்பி அழைப்பதற்கான உத்தரவு எதுவும் நேற்று இரவுவரை மேற்படி கப்பல் கப்டனுக்கு கிடைக்கவில்லை. இதனால் இக் கப்பல் அடுத்த உத்தரவை எதிர்பார்த்து தொடர்ந்தும் காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க] [நி]

# மன்னார் தீவினுள் புலிகள்; மின்வேக அதிரடித் தாக்குதல்

## 5 பொலிசார் ஸ்தலத்தில் பலி

(மன்னார்)

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவினுள் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மின்னல்வேக அதிரடித் தாக்குதல் ஒன்றில், சப்இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பொலிசார் பயணம் செய்த வாகனமும் சேதமடைந்தது. பொலிசாரின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இவ் அதிரடித் தாக்குதலில், விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

நேற்றுக்காலை 11.20 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார் தீவிலுள்ள பேசாலை பகுதியிலிருந்து மன்னார் பட்டணத்தை நோக்கி சிறிலங்கா பொலிஸ் அணியினர் ருப்பர் வாகனதில் சென்றுகொண்டிருந்த பொலிசாரே தாக்குதலுக்குஉள்ளாகினர்.

தாராக்குன்று எனுமிடத்தில் வைத்து இவர்கள் சென்ற வாகனம் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் 1 நிமிடம் நடத்திய மின்னல்வேக அதிரடித் தாக்குதலினால் அவ் வாகனத்தில் சென்ற 5 பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

மேற்படி தாக்குதலில் ஒரு சப்இன்ஸ்பெக்டர் உட்பட 5 பொலிசார் பலியானதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளதாக இந்திய வானொலி நேற்றுமாலை தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் நடத்திய இவ் வெற்றிகர அதிரடித் தாக்குதலில் பொலிசாரிடமிருந்து சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

## இளைஞர்கள் பரிதவிப்பு

பம்பலப்பிட்டி முகவர் மூலமாக மலேசியா சென்றுள்ள பல இளைஞர், யுவதிகள் ஏமாற்றப்பட்டு நிர்க்கதியாகியுள்ளனர்.

சுமார் 65ஆயிரத்துக்கும் 80 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட தொகையைச் செலுத்தி சென்றுள்ள இவர்கள் தற்போது அங்கு பல இன்னல்களை அனுபவித்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகவர் நிலைய நிர்வாகி பிரபல அமைச்சர்ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹேமா - ரணில் முறுகல்நிலை அதிகரிப்பு

### யுக்திய செய்தி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவியான ஹேமாபிரேமதாசா மத வைபவங்களில் கலந்து கொள்ளும்போது அவருக்கு விசேஷ பாதுகாப்போ அல்லது விசேஷ மரியாதைகளோ அளிக்கத் தேவையில்லை என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளதாக அரசாங்க கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'யுக்திய' செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பணிப்பை அடுத்து ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஹேமா பிரேமதாசாவிற்கும் இடையே முறுகல்நிலை அதிகரித்திருப்பதாகவும் கட்சி வட்டாரங்களைமேற்கோள்காட்டி அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது. மேலும், சம்பிரதாய பூர்வவிஜயங்களில் ஹேமா ஈடுபடுவதனையும் ரணில விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரணிலின் இந்தப் பணிப்பையடுத்து மீரிவெட்டிய விகாரை திறப்புவிழாவில் கலந்துகொள்ளச்சென்ற ஹேமா பிரேமதாசாவிற்கு முக்கியஸ்தர் பகுதியில் இடமளிக்கப்படாமையினால் அவர் விழாவில் கலந்துகொள்ளாது திரும்பிவிட்டார் எனவும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அதிரடியில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் தீவினுள் தாராக்குன்று என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரமான அதிரடித் தாக்குதலின்போது தானியங்கித் துப்பாக்கிகளையும், அவற்றிற்கான ரவைகள்ஒருதொகுதிகளையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

புலிகளால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ரி-56-1 ரக துப்பாக்கி - 04
★ இதன் ரவைக்கூடுகள் - 10
★ நடுத்தர ரவைகள் - 340
★ ஏ. கே. கோல்சர் - 02

### மன்னார் கட்டுப்பாட்டு வலயத்தினுள்

## புலிகளின் தாக்குதல் குறித்து ராணுவ வட்டாரம் அதிர்ச்சி

(கொழும்பு)

மன்னார் தீவினுள்ளும், மன்னார் தீவிற்கு வெளியில் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டு வலயத்தினுள்ளும் விடுதலைப் புலிகள் தொடர்ச்

இராணுவ வட்டாரங்களில் கருதப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மன்னார் தீவினுள்ளும், இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியினுள்ளும்

மத்தியில் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், மன்னாரிலுள்ள தமிழ்க் குழுக்களும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம்

# முறுகல்நிலை அதிகரிப்பு

## யுக்திய செய்தி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவியான ஹேமாபிரேமதாசா மத வைபவங்களில் கலந்து கொள்ளும்போது அவருக்கு விசேஷ பாதுகாப்போ அல்லது விசேஷ மரியாதைகளோ அளிக்கத் தேவையில்லை என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளதாக அரசாங்க கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'யுக்திய' செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பணிப்பை அடுத்து ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஹேமா பிரேமதாசாவிற்கும் இடையே முறுகல்நிலை அதிகரித்திருப்பதாகவும் கட்சி வட்டாரங்களைமேற்கோள்காட்டி அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது. மேலும், சம்பிரதாய பூர்வவிஜயங்களில் ஹேமா ஈடுபடுவதனையும் ரணில விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரணிலின் இந்தப் பணிப்பையடுத்து மீரிவெட்டிய விகாரை திறப்புவிழாவில் கலந்து கொள்ளச் சென்ற ஹேமா பிரேமதாசாவிற்கு முக்கியஸ்தர் பகுதியில் இடமளிக்கப்படாமையினால் அவர் விழாவில் கலந்து கொள்ளாது திரும்பிவிட்டார் எனவும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார் தீவிலுள்ள பேசாலை பகுதியிலிருந்து மன்னார் பட்டணத்தை நோக்கி சிறிலங்கா பொலிஸ் அணியினர் ருப்பர் வாகனதில் சென்றுகொண்டிருந்த பொலிசாரே தாக்குதலுக்குஉள்ளாகினர்.

கள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் 1 நிமிடம் நடத்திய மின்னல்வேக அதிரடித் தாக்குதலினால் அவ் வாகனத்தில் சென்ற 5 பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

5 பொலிசார் பலியானதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளதாக இந்திய வானொலி

திய இவ் வெற்றிகர அதிரடித் தாக்குதலில் பொலிசாரிடமிருந்து சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த முகவர் நிலைய நிர்வாகி பிரபல அமைச்சர்ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அதிரடியில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் தீவினுள் தாராக் குன்று என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரமான அதிரடித் தாக்குதலின்போது தானியங்கித் துப்பாக்கிகளையும், அவற்றிற்கான ரவைகள்ஒருதொகுதிகளையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

புலிகளால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ரி-56-1 ரக துப்பாக்கி- 04
★ இதன் ரவைக்கூடுகள் - 10
★ நடுத்தர ரவைகள் -340
★ ஏ. கே. கோல்சர் - 02

## மன்னார் கட்டுப்பாட்டு வலயத்தினுள்

# புலிகளின் தாக்குதல் குறித்து ராணுவ வட்டாரம் அதிர்ச்சி

(கொழும்பு)

மன்னார் தீவினுள்ளும், மன்னார் தீவிற்கு வெளியில் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டு வலயத்தினுள்ளும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த ஒரு வாரகாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இரு தாக்குதல்களும் மிகவும் பாதுகாப்பான பகுதிகள் என சிறிலங்கா இராணுவத்தால் கணிக்கப்பட்ட பகுதிகளாகும். இப்பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டது மட்டுமல்லாமல், தப்பித்துச் சென்றுள்ளமையானது பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏதோ குறைபாடு உள்ளதாக இராணுவ வட்டாரங்களில் கருதப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மன்னார் தீவினுள்ளும், இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியினுள்ளும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமையானது, அங்குவாழும் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், மன்னாரிலுள்ள தமிழ்க் குழுக்களும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என அச்சம் கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மன்னாரில் எம்.பி.வீட்டுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை தொடர்ந்து அங்குள்ள எம்.பி. யின் வீட்டிற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மன்னாரில் தங்கியிருந்த வன்னிமாவட்ட எம். பியான அன்டன் இம்மனுவேல் சில்வாவின் வீட்டுக்கே பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# இன்று கரும்புலிகள் நினைவுநாள்; எழுச்சிகரமாக அனுஷ்டிக்க ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

உலகம் புகழும் சரித்திரம் படைத்த கரும்புலிகளை நினைவு கூருவதற்காகவும் அஞ்சலி செலுத்துவதற்காகவும் இன்று தமிழீழமெங்கும் "கரும்புலிகள் நாள்" அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழீழ தாயக விடுதலைப் போராட்டத்திற் கெதிராகவும் தமிழினத்திற்கெதிராகவும் அணிதிரண்டு நிற்கும் அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகளுக்கெதிராக வெற்றிகரமான தாக்குதல் தொடுத்து வீரகாவியம் படைத்த கரும்புலிகளுக்கு தமிழீழ மக்கள் தமது உணர்வு பூர்வமான அஞ்சலியை செலுத்துவார்கள்.

இன்றைய கரும்புலிகள் தினத்தை அனுஷ்டிப்பதற்கான முன்னேற்பாடுகளில் கடந்த இருவாரங்களுக்கு முன்னரே மக்கள் ஈடுபட ஆரம்பித்துவிட்டனர்.

குறிப்பாக யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வர்ண சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. பிரதான வீதிகள் தோறும் எழுச்சியூட்டும் வாசகங்களையும் கரும்புலிகளின் சரித்திர முக்கியத்துவத்தை பறைசாற்றும் வாசகங்களையும் தாங்கிய பல பதாகைகள் கட்டப்பட்டுள்ளன அத்துடன் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்கள் மற்றும் வாழை மரங்கள் ஆகியன கட்டப்பட்டுள்ளன. இவ்வாறாக குடாநாடு முழுவதும் கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. குடாநாட்டில் உள்ள அரச, தனியார் வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிலும் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபி

(6ஆம் பக்கம் பார்க்க)

# மைலந்தனைப் படுகொலை சாட்சிகளுக்குப் பிடிவிறாந்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மைலந்தனை தமிழ்மக்கள் 39 பேர் கடந்த வருடம் சீருடை அணிந்த சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக இராணுவச் சிப்பாய்கள் 39 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணையை பொலநறுவை நீதிவான் விஜேசிங்க ஜூலை மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாட்சிகள் எவரும் நீதிமன்றில் சமுகமளிக்கவில்லை. இதனாலேயேவழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வழக்குத் தொடுநர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் கம்மன்வில வழக்கு விசாரணையை நெறிப்படுத்த சட்டமா அதிபர் திணைக்களம் அரச சட்டவாதி அனுரமெத்தேகொடவை நியமித்திருப்பதாகவும் மன்றுக்கு அவர் சமுகமளிக்க தபடியாலும் சாட்சிகள் சமூகமளிக்காதபடியாலும் வழக்கு விசாரணையை வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைக்குமாறு கோரினார்.

சாட்சிகளான 43 சிவிலியன்களுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்குமாறும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் மன்றைக்கோரினார்.

படுகொலை யுண்டவர்களின் உறவினர்களின் நலனை கவனிக்க மன்றில் ஆஜரான சட்டத்தரணி கே.எஸ், இரத்தின

(6 ஆம் பக்கம் பார்க்க)

மைலந்தனை படுகொலை

## மட்டக்களப்பில் விசாரணை நடத்தக் கோரிக்கை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மைலந்தனை கிராமத்தில் நடந்த தமிழ் மக்கள் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணையை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திலேயே விசாரிக்க வேண்டுமென்று கோரும் தீர்மானம் ஒன்று அண்மையில் மட்டக்களப்பு கச்சேரியில் அரசாங்க அதிபர் தலைமையில் நடந்த கட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# யுத்தம் தொடருமானால் சம்பள அதிகரிப்பு முடியாது

## தர்மசிறி சேனநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடருமானால் ஜனவரியில் வழங்குவதாகஅறிவிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பைக்கூட வழங்கமுடியாத நிலை ஏற்படும் என சிறிலங்காசுதந்திரக் கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

வறுமையில் வாடும் மக்களுக்கு உதவி வழங்கப் போவதாக வாக்குறுதி அளித்து பதவிக்குவந்த அரசாங்கம் இன்று மக்களுக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தப் போவதாக சர்வதேச நாணய நிதியத்திற்கும் உலக வங்கிக்கும் வாக்குறுதி அளித்துள்ளது.

இவ்வாறு வாக்குறுதி வழங்கி வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைச் சமாளிக்க நிதி உதவி பெற முயல்கிறது. இதில் ஜனசவிய, உணவுமுத்திரை, மகாபொல, இலவசபாடப்புத்தகம், இலவச மதியஉணவு, இலவச சீருடை என்பன நிறுத்தப்பட வேண்டி ஏற்படும். அவற்றை நிறுத்தாவிடின் கடும் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கரும்புலிகள் நினைவாக இன்று 3 பொதுக்கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு இன்று கோட்ட ரீதியாக பொதுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், தென்மராட்சியில் மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலய அரங்கமைதானத்திலும், வலிகாமத்தில் மாவீரர் கலையரங்கிலும் இப் பொதுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

## குப்பி விளக்கு விபத்து மாணவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு தவறுதலாக தட்டுப்பட்டதால் மாணவி ஒருவர் உடல்முழுவதும் பலத்த எரிகாயங்களுக்குள்ளான பரிதாபகரமான சம்பவமொன்று நேற்று இரவு மீசாலைப் பகுதியில் நடைபெற்றது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த தர்மினி தனபாலசிங்கம் (வயது 18) என்ற மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவியே இவ்வாறு எரிகாயங்களுக்குள்ளானவராவார்.

கடந்த இரவு 7 மணியளவில் இவர் படித்துக்கொண்டிருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### அல்ஷேசன் நாய்

அழகிய சடை இன அல்ஷேசன் ஆண்நாய், 9மாதம் நிரம்பியது 40 நாட்கள் நிரம்பிய ஆண், பெண் குட்டியும் உண்டு தொடர்பு: செ. ஆனந்தன் தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி [5277]

### உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி, அந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6998

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற் குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6937)

### அராலியூரரின் நாடகங்கள்

லட்சக்கணக்கானவர்கள் கேட்டு மகிழ்ந்துகொண்டிருக்கின்ற, அராலியூர் சுந்தரம் பிள்ளையின் வானொலி நாடகங்களை நீங்கள் வாசித்தும், படித்தும், நடித்தும் மகிழலாம். (1) கெட்டிக்காரர்கள், (2) முதலாம்பிள்ளை 30-/ நகைச்சுவை நிறைந்த 19 நாடகங்கள். (4092)

### தேர்த்திருவிழா

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறும். நாளை தீர்த்தத் திருவிழாவும் நாளை மறுநாள் புதன்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

### தற்கொலை

(கொழும்பு)

திருமண வீட்டிற்கு அழைத்துச் செல்ல கணவன் வராத

## இரவுநேரமின் ஒளியில் கல்வி

யாழ். நாயன்மார்கட்டுச் சனசமூக நிலையத்தின் முயற்சியால் மகேஸ்வரி வித்தியாலயத்தில் இரவு நேரம் இலவச மின்ஒளியில் 216மாணவர்கள் இரவு 7 00 மணி தொடக்கம் 10மணி வரையும் கல்வி பயின்று வருகிறார்கள்.

இம்மாணவர்களின் சகல சேவைகளிலும் அக்கறை கொண்டு இச்சனசமூக நிலையத்தினர் தமாலான ஆக்கபூர்வமான பணிகளைச்செய்து கொடுத்து வருவதாக இதன் பொறுப்பாளர் திரு சா. பத்மநாதர் தெரிவித்துள்ளார். (24)

## கருப்புலிகள்!



**கப்டன் மில்லர்** ஆரம்பித்து வைத்த மரபில்

லெப். கேணல் போர்க் மேஜர் காந்தரூபன்
மேஜர் டாமபோ கபடன் கொலின்ஸ்
கபடன் வினோத் கபடன் சிதம்பரம
கப்டன் ஜெயந்தன்

எதிரியின் பாசறையை
சிதைத்து —
தமிழ்முக கனவோடு
எமமில கலந்தவர்கள்

யாழ்மாவட்ட
தச்சுத்தொழிலாளர் சங்கம்
16, பசார்லேன்,
யாழ்ப்பாணம்.

(5258),

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



நெஞ்சம் நெகிழும்
31-ம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

## அந்தியேட்டி அழைப்பும்



வடமராட்சி கிழக்கு அம்பனைச் சேர்ந்த
திருமதி

## நகுலேஸ்வரி நகுலராசா (நகுலேஸ்)

அன்னைமடியில் 01-01-1954 இறைவன்அடியில் 07-06-1993

அன்பின் பிறப்பிடமே. பண்பின் இருப்பிடமே
பாசத்தின் சிகரமே நேசத்தின் விளைநிலமே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மாதமொன்று ஆகிறது
இன்றும் தாங்கள் எம் இதயங்களில் நிழலாகத்
தோன்றுகிறீர்கள்
எம்குல விளக்கே மங்கையர் திலகமே
மனிதரில் மாணிக்கமே உம்பிரிவால்
எம் இதயங்கள் வெடிக்கின்றன
எம் கண்கள் தூங்க மறுக்கின்றன
இறைவனின் சோதனை இப்படியுமா அமையவேண்டும்
தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

07-06-93 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வம் திருமதி நகுலேஸ்வரி நகுலராசாவின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எம்மோடு தோளோடு தோள் நின்று எமக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவ்வகையில் உதவி செய்த வடமராட்சிகிழக்கு ப நோ.கூ.சங்கத்தினர்க்கும், பருத்தித்துறை ராஜன் எலக்றிக்கல்ஸ் பணியாளர்கட்கும், மற்றும் எல்லோருக்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 07-07-93 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31-ம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு ப. நோ கூ. ச,
மருதங்கேணி.

## பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர் 104/10

சம்பள அளவுத் திட்டம்: 1305 — 2005 / 40 X 5—50 × 10

(அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 23 — 45 வருடங்கள்

கல்வி மற்றும் தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தின் கணக்குப் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்கு பதிவாளர் நிறுவனத்தின் இறுதிநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டத்தில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடை நிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றின் கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூ. ப. தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த, உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் / எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர் வடமராட்சி கிழக்கு ப. நோ கூ. சங்கம், மருதங்கேணி, அம்பன் என்ற விலாசத்திற்கு 19-07-93க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
மருதங்கேணி.
(சி/6955)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 16-07-1913
உதிர்வு 05-07-1992

அமரர் **அல்போன்ஸ் பிலிப் இராசநாயகம்**
(மயிலங்கூடல இளவாலை)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது - ஆனால்
உங்கள் நினைவு எம்மைவிட்டு
நீங்கவில்லை. எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது.

பிள்ளையின் வானொலி நாடகங்களை நீங்கள் வாசித்தும், படித்தும், நடித்தும் மகிழலாம். (1) கெட்டிக்காரர்கள், (2) முதலாம்பிள்ளை 30-/ நகைச்சுவை நிறைந்த 19 நாடகங்கள். (4092)

### தேர்த்திருவிழா

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறும். நாளை தீர்த்தத் திருவிழாவும் நாளை மறுநாள் புதன்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

## தற்கொலை

(கொழும்பு)

திருமண வீட்டிற்கு அழைத்துச் செல்ல கணவன் வராத காரணத்தினால் மனமுடைந்திருந்த தாய், தன் இரு பிள்ளைகளையும் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் போட்டுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொண்டார்.

தெல்தெனியா பொலிஸ் பிரிவில் நடந்த இச்சம்பவத்தின் பின்னர் சடலங்களைப் பொலிசார் மீட்டெடுத்துள்ளனர்

தன்னையும், தனது பிள்ளைகளையும் திருமணத்திற்குச் செல்வதற்காக அலங்கரித்திருந்த மனைவிக்கும், கணவனுக்குமிடையே மூண்ட சண்டையை அடுத்தே இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றதாம்.

### நீர் இறைக்கும் இயந்திரங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நீரிறைக்கும் இயந்திரங்கள் கொள்வனவுசெய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. அண்மையில் வந்த 'வாதுவ' கப்பலில் எடுத்துவரப்பட்ட நூறு நீரிறைக்கும் இயந்திரங்களும தற்போது பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக மேற்படி சமாசத் தலைவர் தெரிவிததுள்ளார். (22)

### வருடாந்த திருநாள்

(குருநகர்)

கொழும்புத்துறை உதயபுரம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருநாள் இன்று மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரமபமாகி நான்கு தினங்கள் நடைபெறும்.

7ஆம் திகதி புதன் கிழமை மாலை 5மணிக்குநற் கருணை விழா சிறப்பாக நடைபெறும்

8ஆம் திகதி வியாழன்காலை 7மணிக்கு திருநாள் பாடல் பூசையை அடுத்து திருச்சொரூப பவனி நடைபெறும். (21)

---

மேஜா டாமபோ — கபடன் கொலினஸ்
கபடன் வினோத் — கபடன் சிதம்பரம
கப்டன் ஜெயநதன்


எதிரியின் பாசறையை
சிதைத்து —
தமிழ்ழக கனவோடு
எமமில கலந்தவர்கள்

யாழ்மாவட்ட
தச்சுத்தொழிலாளர் சங்கம்
16, பசார்லேன்,
யாழ்ப்பாணம்.

(5258).

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. செ. திருநாவுக்கரசு

(சமாதான நீதிவான். முன்னைநாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உடுப்பிட்டி கிராம சபைத்தலைவர்)

**அன்னை மடியில்:** 15.07.1920 — **ஆண்டவனடியில்:** 12.07.1987

**திதி: 05-07-1993**

பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
நேசத்தைக் காட்டி எமை வளர்த்த ஐயா!
கண்ணை இமைகாப்பது போன்று
காலமெல்லாம் எமைக் காத்தீர்!
விண்ணைக் காப்பதற்கோ — எம்மைவிட்டு
விரைவாக சென்று விட்டீர்!
அன்னியப் படைகளின் அட்டகாசத்தால்... அன்று
உமது உயிர் பிரிந்தது... இல்லை
பிரித்திட்டார் உம்மை எம்மிடமிருந்து
இரக்கமில்லா இலங்கை அரக்கர்கள்.
ஆறு ஆண்டுகள் ஆயினும் — நாம்
மறவோம் உன் நாமததை — எம்
நினைவெல்லாம் நீங்கள் ஐயா! என்றும்
நீங்காது இடம் பெறுவீர்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும் உங்கள்

கரணவாய் வடக்கு. — மனைவி, மக்கள், மருமக்கள்,
கரவெட்டி. [5267] பேரப்பிள்ளைகள்.


---

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மாதமொன்று ஆகிறது
இன்றும் தாங்கள் எம் இதயங்களில் நிழலாகத்
தோன்றுகிறீர்கள்
எம்குல விளக்கே மங்கையர் திலகமே
மனிதரில் மாணிக்கமே உம்பிரிவால்
எம் இதயங்கள் வெடிக்கின்றன
எம் கண்கள் தூங்க மறுக்கின்றன
இறைவனின் சோதனை இப்படியுமா அமையவேண்டும்
தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

07-06-93 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வம் திருமதி நகுலேஸ்வரி நகுலராசாவின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எம்மோடு தோளோடு தோள் நின்று எமக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவ்வகையில் உதவி செய்த வடமராட்சிகிழக்கு ப நோ.கூ.சங்கத்தினர்க்கும், பருத்தித்துறை ராஜன் எலக்றிக்கல்ஸ் பணியாளர்கட்கும், மற்றும் எல்லோருக்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 07-07-93 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31-ம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன் - மு. நகுலராசா,
மகன் - ந தேவகாஸ்
அம்பன். — சகோதரன் - தி இலங்கநாதன்
குடத்தனை. (5271) — சகோதரி - பா. கிரிதா

---



மலர்வு
16-07-1913
உதிர்வு
05-07-1992

### அமரர் அல்போன்ஸ் பிலிப் இராசநாயகம்

(மயிலங்கூடல இளவாலை)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது - ஆனால்
உங்கள் நினைவு எம்மைவிட்டு
நீங்கவில்லை. எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது.

எந்நாளும் உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்.

கிருபராசா, — மனைவி, மகள், மருமகன்,
முறிவு நோவுவைத்தியர், — பேரன், மருமக்கள்,
சிறுப்பிட்டி. (5280) — உறவினர்கள்.

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-07-05

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய-

**கரும்புலி கப்டன் மில்லர்** (வல்லிபுரம் வசந்தன் - தாமரைக்குளத்தடி, துன்னாலை தெற்கு, கரவெட்டி - யாழ்)

இதே முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**வின்சன்** (சரவணமுத்து சரவணபவன் - நாவலர் வீதி படடிப்புலவு, நெடுங்கேணி - மணலாறு)

**மேஜர் கமல்** (துரைரத்தினம் பரமேஸ்வரராசா - வல்வெட்டித்துறை)

இதே தினம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடடுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதிகள்.

1989ஆம் ஆண்டு தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ **ரகு** (பத்தக்குட்டி மனோகரன் - மணற்சேனை. மூதூர் திருமலை)

மட்டு - ஏறாவூர்ப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட, மட்டு நகர்ப்பிரதேசப் படைத்துறை ஆணையாளர்:

★ **கஜன்** (மார்க்கண்டு நிஷாகரன் - அன்புவழிபுரம்- திருமலை)

★ **முருகன்** (கைலாசபதி அன்பழகன் - சிவரஞ்சனி வீதி, நாயன்மார்கட்டு - யாழப்பாணம்)

யாழ் - மல்லாகத்தில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த-

★ **யோசப்** (யோண்பிள்ளை யோசப்- அளவெட்டி-யாழ்)

★ **ஜோண்சன்** (சூசைதாசன் ஜோண்சன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்)

★ **சந்திரன்** (— சந்திரவதனன் - பருத்தித்துறை)

1990ஆம் ஆண்டு அம்பாறை - கஞ்சிகுடியாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

**சுந்தர்** (—— தம்பிலுவில் - அம்பாறை)

**ரமணன்** (சோமசுந்தரம் திருச்செல்வம் - காரைதீவு- அம்பாறை)

**கஜமோகன்** (—— கண்ணகிபுரம் - அம்பாறை)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் பிரதீப்** (சுப்பரமணியம் சதானந்தராசா- கொக்குத்தொடுவாய் - மணலாறு)

திருமலை - பன்குளம்- 10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் திலகன்** (வீரசிங்கம் திலகரட்ணம் - தம்பலகமம்- திருமலை)

ஆனையிறவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கண்ணிவெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**திலீப்** (கந்தசாமி கண்ணன் - கல்லுப்பிட்டி கண்டாவளை, பரந்தன் - கிளிநொச்சி)

அம்பாறை - கோமாரி இடம் பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

திருமலை - மூதூர், வெருகல், முகத்துவாரம், ஈச்சிலம்பத்தைப் பகுதிகளில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட 38 தமிழர்கள். கந்தளாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 24 தமிழர்கள்.

பச்சனூர்ப் பகுதியில் தேவாலயம் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்படட 04 தமிழர்கள்.

இதே தினம் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுவன்.

1992ஆம் ஆண்டு புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரின் உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2 ம் லெப், தமிழினியன் யக்சன்** (எதிர்மன்னசிங்கம் ஆனந்தவேல் - சுழிபுரம் வடக்கு - யாழ்)


ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6950)

# கரும்புலிகள் நாள்-யூலை 05




கரும்புலி

கப்டன் **மில்லர்**

(வ. வசந்தன்)

துன்னாலை

05-07-1987 அன்று நெல்லியடி இராணுவ முகாம் தாக்குதலின் போது



கடற் கரும்புலி

மேஜர் **காந்தரூபன்**

(ரு. கோணேஸ்வரன்)

வல்வெட்டித்துறை

10-07-1990 அன்று வல்வெட்டித்துறையில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...




கடற் கரும்புலி

கப்டன் **கொலின்ஸ்**

(ப. சில்வெஸ்டர்)

மன்னார்

10-07-1990 அன்று வல்வெட்டித்துறையில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...



உங்களுக்குமட்டும் எங்கள்
உணர்வுகள் புரியும்
உறவுகளாய் நமிருக்கும்
காரணம் தெரியும்
பொங்கும் மகிழ்வோடு நீங்கள்



தாக்குதலின் போது

கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...

கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...

உங்களுக்குமட்டும் எங்கள்
உணர்வுகள் புரியும்
ஊமைகளாய் நாமிருக்கும்
காரணம் தெரியும்
பொங்கும் மகிழ்வோடு நீங்கள்
போய்விடுவீர்கள்
போனபின்னர் நாமழுவோம்
யாரறிவீர்கள்?



கடற் கரும்புலி

**கப்டன் வினோத்**

(வே. திலகராஜா)

வல்வெட்டித்துறை

10-07-1990 அன்று வல்வெட்டித்துறையில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...



கரும்புலி

**லெப்.கேணல் போர்க்**

(மா. அரசரத்தினம்)

சேமமடு

23-11-1990 அன்று மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலின்போது




கரும்புலி

**மேஜர் டாம்போ**

(கா. தயாபரன்)

முழங்காவில்

19-03-1991 அன்று சிலாபத்துறை இராணுவ முகாம் தாக்குதலின்போது...




கடற் கரும்புலி

**கப்டன் சிதம்பரம்**

(பெ. சந்திரன்)

வல்வெட்டித்துறை

04-05-1991 அன்று வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின் போது...



கடற் கரும்புலி

**கப்டன் ஜெயந்தன்**

(ச. பத்மநாதன்)

முறக்கொட்டாஞ்சேனை

04-05-1991 அன்று வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின் போது...

# கரும்புலிகள்

## தமிழீழ விடுதலைப் போரின் காவிய நாயகர்கள்

## உலகை வியப்பில் ஆழ்த்திய வீர மறவர்கள்

'கரும்புலிகள்' என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்திமிக்கதொரு சொற்பதமாகிவிட்டது.

கரும்புலித் தாக்குதலை நடத்தும் விடுதலைப் புலி உறுப்பினர்களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும், வியப்பிலும் ஆழ்த்திவருகின்றன.

மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம் புகும் இக்கரும்புலிகள் யார்?

இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப்பின்னணி என்ன?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும், மன ஓர்மமும், சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது? என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகிவிட்டன.

இன்று உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விளையும் மக்களை மிருகத்தனமாக அடக்கிஒடுக்குமுனைகின்றனர்.

இவர்களிடம் ஆள் - ஆயுத பலம் உண்டு. ஆட்சி அதிகாரமுண்டு. தொழில் நுட்ப வலு உண்டு. இவற்றைத் தேவைப்படும் இடங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி, போராட்ட சக்திகளை பலமிழக்கச் செய்து தங்களது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றனர்.

இந்த நவீன அடக்குமுறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவுக்கு ஆள்-ஆயுத-தொழில் நுட்பத் திறன்களைப்

தன்னை இழந்து எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பலம்மிக்கஒரு இலக்கை அழிக்கக்கூடிய ஒரு படையணி ஒன்றை அமைக்கும் யோசனையைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே கொண்டுள்ளார்.

அந்த எண்ணக் கருவைச் செயற்படுத்தக்கூடிய ஆற்றலைப் புலி வீரர்கள் மத்தியில் சிறுகச்சிறுக ஏற்படுத்திக் கொண்டுவந்தார்.

1981-ம் ஆண்டு திரு. தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் 'சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் கொழும்பில் வைக்கப்பட்டிருந்தபொழுது தற்கொலைப் படையணி ஒன்றிற்குத் தலைமைதாங்கிச் சென்று அவர்களை மீட்டுவர பிரபாகரன் முயற்சித்தார். ஆனால் அது பல்வேறு காரணிகளால் தவிர்க்கப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது.

பின்னர் 'ஒப்பறேசன் லிபறேசன்' என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கைமூலம் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன்மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக்கூடியது. சிறிலங்கா அரசும், புலிகளை அழிக்கலாமெனத் திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

இதேசமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாகப் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மற்றைய பகுதிகளுக்குச் சென்றதுடன், அந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும், போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக்கூடிய சூழலும் தோன்றியது.

இந்தச் சூழ்நிலைகளில்தான்

சிங்கள அரசையும், அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலிகொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை, கரும்புலி கப்டன் மில்லர் செய்து முடித்தார்.

அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்குதல்களை நிகழ்த்திவிட்டோம். அதில் பல கரும்புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப்புலி வீரனும், வீராங்கனையும், சாவைச் சந்திக்கத் தயாரான நிலையில்தான் இருக்கிறார்கள் ஆனால், தங்களுடைய சாவு எப்போது வருமென்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும்போது கூட திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையோடுதான் ஒரு புலிவீரன் செல்கிறான். சில வேளைகளில் அங்கே அவன் சாவைச் சந்திக்கலாம், அல்லது திரும்பி வரலாம்.

ஆனால்கரும்புலிகளின்நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு பல நாட்களின் முன்னரேயே தங்களது சாவைத் தெரிந்துகொண்டு விடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப் போகிறேன் என்ற உண்மையைப்பூரணமாகத்தெரிந்து கொண்டுதான், கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்கின்றார்கள்.

> அம்மா! நான் இயக்க வேலையா ஒரு இடத்திற்கு போக இருக்கிறன். இது முக்கியமான வேலை. இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது. அது நாட்டுக்கு மட்டும்தான்.
>
> – கப்டன் கொலின்ஸ்



தலைவர் அவர்களுடன் கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன்வினோத், கப்டன் கொலின்ஸ்



பூதம் அல்ல இது. அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இயக்க சக்திக்கு உந்து விசையாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகின் எந்தத் தொழில் நுட்பத்தாலும்

இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் தங்களைக்

> மன்னாரில் நடக்கிற முதல் கரும்புலித்தாக்குதலை நான்தான் செய்ய வேண்டும்.
>
> நான் திரும்பி வர மாட்டன், என்னால முடிந்த அளவுக்கு உள்ளே சென்று முகாமின் சுவரோட மோதுவதுதான் நோக்கம்.
>
> - மேஜர் டாம்போ

தடுக்க முடியாததும், உலகின்

கரும்புலி அணியில் இணைத்

அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விளையும் மக்களை மிருகத்தனமாக அடக்கிஒடுக்குமுனைகின்றனர்.

இவர்களிடம் ஆள் - ஆயுத பலம் உண்டு. ஆட்சி அதிகாரமுண்டு. தொழில் நுட்ப வலு உண்டு. இவற்றைத் தேவைப்படும் இடங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி, போராட்ட சக்திகளை பலமிழக்கச் செய்து தங்களது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றனர்.

இந்த நவீன அடக்குமுறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவுக்கு ஆள்-ஆயுத-தொழில் நுட்பத் திறன்களைப் போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்குப் போராட்டத் திறன்களில் இருந்து மிக உச்சப் பயன்களைப் பெற்றால் ஒழிய போராட்டச்சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாது.

எனவே ஒடுக்குமுறையாளர்களின் நாடியை ஒடுங்கச்செய்யும் அளவிற்குப் பல்வேறு திசைகளில் இருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச் சக்கரம் நகர்த்தப்படவேண்டும். இந்தப் போர் வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும், உன்னதமானதுமான புலிகளின் போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதலாகும்.

கைப்பற்றிய சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன்மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக்கூடியது. சிறிலங்கா அரசும், புலிகளை அழிக்கலாமெனத் திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

இதேசமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாகப் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மற்றைய பகுதிகளுக்குச் சென்றதுடன், அந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும், போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக்கூடியசூழலும் தோன்றியது.

இந்தச் சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித் தாககுதலை நடாத்தத் தலைவர் பிரபாகரன் முடிவெடுத்து, அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

1987-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்யாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி புகுந்து அம்முகாமைச் சின்னாபின்னமாக்கியது.



வெடிமருந்து வண்டியில் சிரித்த முகத்தோடு லெப். கேணல் போர்க்

> என்ரை மனசில செத்தவங்கள் ஞாபகங்கள்தான் நிரம்பி வழிகிறது. அவங்களை என்னால மறக்க முடியாது.
>
> - கப்டன் மில்லர்



வெடிமருந்து நிரப்பிய படகுடன் கரும்புலிகள் கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம்.

இராணுவ முகாமிற்குள் இருககும் பல நூறு எதிரிகளின் கரங்களிலிருநது முழங்கிக் கொண்டிருக்கும துபபாக்கிகளைக் கருத்தில் எடுக்காது உடைந்து நொருங்கிப்போய் இருக்கும பாதை வழியே, சீராக — நிதானமாக — வெடிமருந்து வண்டியை ஓட்டிச் சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளேயே புகுந்து, தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பதுசாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும், அலைகளைக் கொண்ட அகன்ற சமுத்திரத்துள், நடு வந்து, குறித்த இலக்கின்மீது மோதி வெடிமருந்துப் படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற ஒரு மனிதமனம் உடன்படாது.

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்யப்பட முடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக் கொள்ளத் தயாரான மனோதிடம் தேவை. தனது இறுதி நேரத்தில்கூட பதற்றமின்றி உறுதியுடன், குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ.முட்டாள்தனமாகவோ

> மாங்குளம் முகாம் பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். எனவே நான்தான் சக்கை லொறி கொண்டு போக வேணும். நான் புறப்படுறன்... இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது
>
> - லெப். கேணல் போர்க்

இரவில், எதிரியின் நவீன காவற்கருவிகளையும் புத்தி சாதூரியமாக மீறி, வெடிமருந்துப்படகுடன் உட்புகுந்து எதிரியின் சப்பலை நெருங்கி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனம் காண்பதற்காக ஒருமுறை கப்பலை சுற்றி தன்னை அழித்துக் கொள்ள முனையும் தற்கொலை முயற்சியைப் போலல்ல இது.

அல்லது எதிரியின் கண்ணோட்டத்தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல இது. அடிமைப் பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இயக்க சக்திக்கு உந்து விசையாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும் புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகின் எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும், உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்கமுடியாததும்தான் எங்களதுகரும்புலிகளின்மனோபலம்

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல. எமது சமுதாய எண்ண வோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப் போகும் சக்தி கொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமுமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும், தனது உயிரைப் போக்கிக் கொள்ளும் போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித் தள்ளிவிடுவதுடன், வீரம்மிக்க யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட, தமிழ்ச் சமூகத்திற்குத் தேவையான உணர்வையும் ஊட்டி விடுகின்றது.தேசபக்தியையும் வீர உணர்வையும் அடித்தளமாகக் கொண்ட

இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முறையும் கரும்புலித் தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும் போது, தன்னைத்தான் தேர்ந்து எடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வீரனும், வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித் தாக்குதலுக்குத் தயாராகும் இந்தத் தியாகச் செயலை உலகில் எங்குமே காணமுடியாது. இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.

களம்புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரச்சாதனைகள், சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு கிலியை உண்டுபண்ணுகின்ற அதேசமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத் தாக்கம், தமிழீழக் குடிமக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

நன்றி; விடுதலைப்புலிகள்

> மன்னாரில் நடக்கிற முதல் கரும்புலித்தாக்குதலை நான்தான் செய்ய வேண்டும்.
>
> நான் திரும்பி வர மாட்டன். என்னால முடிந்த அளவுக்கு உள்ளே சென்று முகாமின் சுவரோட மோதுவதுதான் நோக்கம்.
>
> - மேஜர் டாம்போ

## சுதந்திர ஒளி

புலியிருந்த குகையதனைப் புறநானூற்றில் கண்டேன் - இன்று
கருமபுலி வளர்ந்த கருவறையைக் களத்தினிலே கண்டேன்!
வரும் படைகள் அஞ்சிடவே வரலாறு படைக்கும்
கரும்புலிகள் உயிர்ப்பினிலே காலனுடல் நடுங்கும்!
[அன்று புலியிருந்த ---]

கரிகாலப் பெருஞ்சோழன் கடல் கடந்தும் ஆண்டான்-இன்று
கரிகாலன் கடல் கடந்த பகைவென்று வாழ்ந்தான்!
வரும்நாளில் தமிழீழம் வரலாறு படைக்கும்
வங்கக் கடலிலுமோர் கரும்புலிகள் களமொன்று பிறக்கும்!
[அன்று புலியிருந்த--]

பெரும்படைகள் பேதலித்துப் பின்வாங்கிச் செல்ல
கரும்புலிகள் களமாடி கடல்தானை வெல்லும்
வரும்நாளில் வல்லரசு வாலறுந்து செல்லும்
கரும்புலிகள் கல்லறைகள் காவியங்கள் சொல்லும்!
[அன்று புலியிருந்த ---]

கடல்பெரிது வான்பெரிது யார் சொன்னது?
கரும்புலிகள் தியாகத்தை என்னென்பது!
கதிரவனும் ஒளியிழந்து கடுகளவாய் மாறும்
கரும்புலிகள் ஒளியினிலே தமிழீழம் வாழும்!
[அன்று புலியிருந்த---]

— ம. ஆனந்தன்

சிந்தனைக்கு

சொற்களைக்காட்டிலும் செயல் உரக்கப் பேசும்,
- பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## வணக்கத்திற்குரியவர்கள்

## யூலை-5

கரும்புலிகள் நாள்

1987ஆம் ஆண்டு இத்தினத்தில் தான் விடுதலைப் புலிகள் இயக்கம் முதலாவது கரும்புலித் தாக்குதலை நடத்தியது. இதன்பின் பல கரும்புலித் தாக்குதல்கள் நடந்தன. பல கரும்புலிகள் களத்தில் வீரச்சாவடைந்தனர்.

உலகை உலுக்கிய இக் கரும்புலிகள் தமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் புரிந்த தியாகம் ஒப்புவமையற்றது. எட்டமுடியாத சிகரம் அது. இவர்களின் தற்கொடை உலக வரலாற்றில் எங்கும் காண முடியாத அர்ப்பணிப்புக்கள்.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் தனித்துவமானதும், அவர்களின் பிரமிக்கத் தக்க சாதனைகளுக்கும் அடித்தளமாகவுள்ளவை அவர்களின் சாவிற்கஞ்சாத முடிவும், செயற்பாடுமே ஆகும். இதனைப் பார்த்து உலகமே வியந்து நிற்கின்றது. விளங்கிக்கொள்ள முடியாமல் தடுமாறுகின்றது. ஆனால். அவர்களால் இதனை விளங்கிக் கொள்வது கடினமாகும். ஏனெனில் இது இந்த மண்ணின் மைந்தர்களான விடுதலைப் புலிகளுக்குப் பிரத்தியேகமானது. அதன் தலைமைத்துவத்தால் உருவாக்கப்பட்டது.

விடுதலைப் புலிப் போராளிகள் யாவரும் உயிரைத் தற்கொடை செய்வதற்குத் தயாரானவர்கள் தான். அவர்களின் கழுத்தில்தொங்கும் 'சயனைட் குப்பிகள்' அதனையேகாட்டுகின்றன இவர்கள் எங்கும்எப்பொழுதும், எந்த நிலையிலும்சாவை அணைத்துக் கொள்ளக் காத்திருக்கின்றார்கள். இருப்பினும் இவர்களில் இருந்தும் கரும்புலிகள் வேறுபட்டவர்கள். தமது சாவையும், நேரத்தையும் முறையையும் தாமே நிச்சயித்துக் கொள்வதிலேயே அவர்கள் வேறுபடுகின்றார்கள்.

கரும்புலிகளின் இவ் அதி உன்னத தியாகம் மனித நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டது. இதனை அடைவதற்கு மரணத்தை விஞ்சும் ஆன்மீக பலமும், மனோதிடமும் தேவை. கரும்புலித் தாக்குதல் என்பது தனியே மரணத்தை அணைத்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கையல்ல. தனது மரணத்தை மறந்து குறிக்கோளை அடையத் துடிக்கும் ஓர் இலட்சியவாதியின் உன்னத போராட்டம். ஆனால், இதன் பலன் மண்ணிற்கும் மக்களுக்குமே உரியது. அவர்களுக்கென ஆறடி மண்

விருதலைப்புலிகளை கட்டுப்படுத்த

# தமிழக அரசுக்கு நவீன ஆயுதங்கள் மத்திய அரசு வழங்கவுள்ளது

### பஞ்சாப், காஷ்மீரில் கைப்பற்றியவையாம்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களையும் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்தும் பொருட்டு தமிழக அரசுக்கு நவீன ஆயுதங்களைக் கொடுத்து உதவ மத்திய அரசு முன்வந்திருப்பதாக கூறப்படுகின்றது

கடந்த வாரம் இந்திய மத்திய அரசின் உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் அண்மையில்சென்னைக்குவந்து முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்துபேச்சு நடத்தியதைத் தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமெனவும், தமிழக அரசுக்கு ஆயுதங்கள் வழங்க இருப்பதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

மேலும், பஞ்சாப் மற்றும் காஷ்மீர் மாநிலங்களில் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றிய ஏ. கே. 47ரக நவீன தன்னியக்க துப்பாக்கிகளைமத்திய அரசு தமிழக அரசுக்கு வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் பம்பாய் குண்டு வெடிப்பையடுத்து மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையிலிருந்து தென் கரையோரப் பகுதிகளினூடாக ஆர்: டி. எக்ஸ். வெடி பொருள்கள் கடத்தப்பட்டிருப்பது தெரிய வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்

## விமான விபத்து 40 பேர் பலி

இந்தோனேசிய ஜெட் விமானமொன்று நெடுந் தொலைவிலுள்ள கிழக்கு நகரமொன்றில் தரையிறங்கும்வேளையில் விபத்திற்குள்ளாகியது. இதனால் இவ் விமானத்தில் இருந்த 40 பயணிகள் கொல்லப்பட்டனர். மொத்தம் 48 பேருடன் ஜாகார்த்தாவில் இருந்து 2700 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சாராங்கிலுள்ள ஜெப்மாள் விமானத் தளத்தில் இறங்க முயற்சித்த போது இவ்விமானம் விபத்திற்கு உள்ளாகியது.

பாகிஸ்தானில்

## தேர்தல்களை நடத்தும்படி எதிர்க்கட்சிகள்வலியுறுத்தல்

பாகிஸ்தானின் தேசிய பேரவை உட்பட எல்லா மாகாண சட்டப்பேரவைகளையும் கலைத்து விட்டு புதிதாக தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகளினதும் கூட்டணி அதிபர் குலாம் இஷாக்கானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ரேற்று முன்தினம் லாகூரில் பொதுக்கூட்டமொன்றை நடத்திய பாகிஸ்தானின் எதிர்க் கட்சித் தலைவர்கள் அங்கு மேலும் கூறுகையில்; புதிதாக தேர்தல்கள் நடத்தப்பட்டால் தான் நாடு இப்போது எதிர் நோக்கியிருக்கும், இக்கட்டான நிலையிலிருந்து விடுபட முடியும் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை அதிபர் குலாம் இஷாக்கான் பதவிவிலகவேண்டும் என்ற பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான அரசின் மூத்த அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், சோமாலியா மற்றும் தென் ஆபிரிக்கா சுற்றுப்பயணம் செய்யவிருந்த தமது திட்டத்தை இராணுவத் தளபதி ஜெனரல் வகீட் கைவிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

## தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மோசமானதாக இல்லை

– பாரதீய ஜனதா அறிவிப்பு

மற்றையமாநிலங்களுடன்ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை அவ்வளவு மோசமானதாக இல்லை என்று பாரதீயஜனதாக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் சந்திரபோஸ் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும்கூறுகையில்; எதிர்வரும் தேர்தல்களில் மாநிலத்தில் தமது கட்சி தனித்துத் தான் போட்டியிடும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் அமைப்பின் 356ஆவது சட்டப் பிரிவை பயன்படுத்தி தமிழக அரசைக் கலைப்பதை தமது கட்சி ஆதரிக்காது என்றும், சட்டம், ஒழுங்கு நிலைமை சீராக இல்லாத பிற மாநிலங்களில் இச் சட்டத்தை பயன்படுத்திய பின்னரே தமிழ்நாட்டிற்கும் அதனை பயன்படுத்த வேண்டுமென்றும் தெரிவித்தார்.

## பிலிப்பைன்ஸ் படகு விபத்து; 300 பேர் மூழ்கிப் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிற்கு வடக்கே பொக்காவா நகரில் இடம்பெற்ற படகு விபத்தில் 300 பேர் இறந்ததாக அஞ்சப்படுகிறது, இதுவரை 250 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன

றோமன் கத்தோலிக்க சமய சம்பந்தமான ஆற்று விழாவொன்றில் 500 பேரைக் கொண்ட மூன்று படகுகள் ஆற்றில் மூழ்கியதால் இந்த விபத்துச் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அணு சோதனையை நிறுத்த அமெரி. முடிவுசெய்துள்ளது

– அதிபர் கிளிண்டன்

[வாஷிங்டன்]

அணுஆயுத சோதனைகள் எதையும் ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைப்பது என்று அமெரிக்கா முடிவு செய்திருப்பதாக அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்; அணு சக்தி வசதி படைத்த உலகிலுள்ள ஏனைய நாடுகளையும் அவ்வாறு செய்யும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். அமெரிக்கா அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை அணுஆயுத சோதனை எதையும் நடத்தாது என்றும் தெரிவித்தார்.

வாராந்தர வானொலி மூலமான உரையில் பில் கிளிண்டன் மேலும், தெரிவிக்கையில் இந்த தடையை மற்ற அணு சக்தி நாடுகளும் பின்பற்றுமானால், அமெரிக்கா விரிவான வகையில் சோதனைத் தடை பற்றி பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் தெரிவித்தார்.

கம்போடிய தேர்தல் உதவிக்காக

## சிறிலங்கா அரசுக்கு ஐ.நா. பாராட்டு

கம்போடியாவில் தேர்தல்களை நடத்த உதவியமைக்காக ஐக்கிய நாடுகள் சபை சிறிலங்காவுக்கும் நன்றியுடன் பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் இருக்கும் சிறிலங்காவிற்கான நிரந்தரப் பிரதிநிதிக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைப்பினால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, சிறிலங்காவிலிருந்து கம்போடியத் தேர்தல்களில் பங்கேற்பதற்காக சென்ற 53பேரும் மிகவும் முக்கியமான பணிகளை ஆற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜ் புஷ் கொலை முயற்சி

## நேர்மையற்ற விசாரணை மன்னிப்பு சபை கண்டனம்

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை குவைத்தில் வைத்து கொலை செய்ய முற்பட்டதால் பதினொரு ஈராக்கியர் மற்றும் மூன்று குவைத்தியர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கு நேர்மையற்ற வகையில் விசாரிக்கப்படுவதாக சர்வதேச மன்னிப்பு ஸ்தாபனம் குற்றம்சாட்டியுள்ளது.

லண்டனில் இவ் அமைப்பு கடந்த வெள்ளியன்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் ''குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்த போது சட்டத்தரணிகளை அமர்த்திக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும், இதனால் இந்த வழக்கை வேறு ஒரு நீதிமன்றத்திற்கு மாற்றி மீள விசாரிக்கப்படவேண்டும் என்றும்'' தெரிவித்துள்ளது.

## ஆங்கில தின போட்டி

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயமும், யாழ். செட்டித்தெரு மெதடிஸ்தமிஷன் வித்தியாலயமும் இணைந்து நடத்திய ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு லெப். வாசு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டது.

## கொழும்பு பாடசாலைகள் தரம்பிரிப்பில் பாரபட்சம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை தரமுயர்த்துவதில் பாரபட்சம்

தேசிய பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதே போல 'ஏ' தரமுடைய பாடசாலையாக, ஒன்றும் 'பி' தரமு

## விளையாட்டு

யாழ். வைக்கிங்ஸ் விளையாட்டு கழகத்தினர் தமது இருபந்தைந்து வருடங்கள் பூர்த்தியடைந்ததை கொண்டாடும் முகமாக யாழ். உதைபந்தாட்ட கழகங்களுக் கிடையில் நடாத்திய 9 பேர்

## பொலநறுவை பாலத்தடி சோதனை பற்றி விசாரணை

(பொலநறுவை)

பொலநறுவை - மன்னம்பிட்டி பாலத்திற்கு அப்பால் ஒரு சிலயார் தொலைவிலுள்ள ''தையகெல'' பாலத்

சீருடை அணிந்த ஒரு கோஷ்டி நடத்தியதாகக் கூறப்படும் மேற்படி சோதனை தொடர்பாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகமும் விப

வரத் தற்கொடை செய்வதற்குத் தயாரானவர்கள் தான். அவர்களின் கழுத்தில்தொங்கும் 'சயனைட் குப்பிகள்' அதனையேகாட்டுகின்றன இவர்கள் எங்கும்எப்பொழுதும், எந்த நிலையிலும்சாவை அணைத்துக் கொள்ளக் காத்திருக்கின்றார்கள். இருப்பினும் இவர்களில் இருந்தும் கரும்புலிகள் வேறுபட்டவர்கள். தமது சாவையும், நேரத்தையும் முறையையும் தாமே நிச்சயித்துக் கொள்வதிலேயே அவர்கள் வேறுபடுகின்றார்கள்.

கரும்புலிகளின் இவ் அதி உன்னத தியாகம் மனித நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டது. இத்னை அடைவதற்கு மரணத்தை விஞ்சும் ஆன்மீக பலமும், மனோதிடமும் தேவை. கரும்புலித் தாக்குதல் என்பது தனியே மரணத்தை அணைத்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கையல்ல. தனது மரணத்தை மறந்து குறிக்கோளை அடையத் துடிக்கும் ஓர் இலட்சியவாதியின் உன்னத போராட்டம். ஆனால், இதன் பலன் மண்ணிற்கும் மக்களுக்குமே உரியது. அவர்களுக்கென ஆறடி மண் தானும் அவர்கள் கேட்டதில்லை. காற்றுடனும், கடலுடனும் அவர்கள் கலந்து விடுகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலிகளின் சாதனை மகத்தானது. ஒவ்வொரு தாக்குதலும் சிறிலங்காவின் இராணுவ, அரசியல் போக்கை நிர்ணயிப்பவையாகவும், திருப்பங்களுக்கு வித்திட்டவையாகவும் அமைந்தவை. முதலாவது கரும்புலித் தாக்குதல், நெல்லியடியில் மேற்கொள்ளப்பட்டபோது 'ஒப்பரேசன் லிபரேசனின்' வெற்றிக் களிப்பை சிறிலங்கா இராணுவம் மறக்க வேண்டிவந்தது. சிறிலங்கா அரசாங்கம் தனது இராணுவத்தினரை காப்பாற்றிக்கொள்ள இந்திய-சிறிலங்கா உடன்பாட்டின் மூலம் இந்தியாவிடம் சரணாகதி அடைந்தது.

சிறிலங்கா கடற்படைக் கப்பல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் தமிழீழ மண்ணில் மட்டுமல்ல, கடற்பரப்பிலும் சிங்கள ஆயுதப் படையின் நடமாட்டத்திற்கு எல்லைகளை வகுத்தது. சுதந்திர நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியது.

மாங்குளம், இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலானது தமிழர்தாயகத்தின்ஒருபகுதியானவடக்கே, தரையால்சூழப்பட்ட தனித்துவமானஇராணுவமுகாம்கள் பராமரிக்க முடியாதவை என்பதை சிறிலங்கா இராணுவத்திற்கு உணர்த்தியது. அதாவது இராணுவக் கிராமங்கள், அல்லது இராணுவ முகாம்களின் தொகுதிகள் மட்டுமேஅதுவும் முப்படையின் உதவியும் பெறக்கூடிய நிலையிலேயே வைத்திருக்க முடியும் என்பதைப் புகட்டியது.

இவை யாவற்றிக்கும் மேலாக, எதையும் சாதிக்கவல்ல, எவராலும் தடுத்து நிறுத்த முடியாத ஆன்மீக பலமும், மனோபலமும் கொண்ட வெல்ல முடியாத ஒரு தற்கொடை அணியொன்று தமிழீழத்தை அடைவதற்கான இலட்சியத்துடன் உள்ளதென்பதை கரும்புலிகள் உலகிற்கு உணர்த்தினர். சாவிற்கஞ்சாது கரும்புலிகள் இச் சாதனையை ஈட்டினர்.

மரணத்தை வென்ற இம் மாவீரர்கள் வணக்கத்திற்குரியவர்கள். இம் மாவீரர்களை தமிழீழ மண்ணிற்கு ஈன்று தந்த பெற்றோர்கள் போற்றுதற்குரியவர்கள்.

## சிறிலங்கா அரசுக்கு ஐ.நா. பாராட்டு

கம்போடியாவில் தேர்தல்களை நடத்த உதவியமைக்காக ஐக்கிய நாடுகள் சபை சிறிலங்காவுக்கும் நன்றியுடன் பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் இருக்கும் சிறிலங்காவிற்கான நிரந்தரப் பிரதிநிதிக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைப்பினால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, சிறிலங்காவிலிருந்து கம்போடியத் தேர்தல்களில் பங்கேற்பதற்காக சென்ற 53பேரும் மிகவும் முக்கியமான பணிகளை ஆற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ளார். அமெரிக்கா அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை அணுஆயுத சோதனை எதையும் நடத்தாது என்றும் தெரிவித்தார்.

வாராந்தர வானொலி மூலமான உரையில் பில் கிளிண்டன் மேலும், தெரிவிக்கையில் இந்த தடையை மற்ற அணுசக்தி நாடுகளும் பின்பற்றுமானால், அமெரிக்கா விரிவான

தொடுக்கப்பட்ட வழக்கு நேர்மையற்ற வகையில் விசாரிக்கப்படுவதாக சர்வதேச மன்னிப்பு ஸ்தாபனம் குற்றம்சாட்டியுள்ளது.

லண்டனில் இவ் அமைப்பு கடந்த வெள்ளியன்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் ''குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்த போது சட்டத்தரணிகளை அமர்த்திக்கொள்ள

### ஆங்கில தின போட்டி

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயமும், யாழ். செட்டித்தெரு மெதடிஸ்தமிஷன் வித்தியாலயமும் இணைந்து நடத்திய ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்றமாணவர்களுக்கு லெப். வாசு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டது.

## கொழும்பு பாடசாலைகள் தரம்பிரிப்பில் பாரபட்சம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை தரமுயர்த்துவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் சுமார் அறுபது தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் இருக்கின்றபோதும் ஒரேயொரு பாடசாலை தமிழ்மொழி மூலப் பாடசாலை மட்டுமே தேசிய பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதே போல 'ஏ' தரமுடைய பாடசாலையாக, ஒன்றும் 'பி' தரமுடைய பாடசாலையாகஆறும், 'சி' தரமுடைய பாடசாலையாக ஒன்றும் இருக்கின்றன.

சிங்களப் பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது, இந்த தரம் பிரித்தலில் சமமின்மை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இளம்பெண்மீது பலாத்காரம் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

(கொழும்பு)

இளம் பெண் ஒருவரை விசாரணைக்கென அழைத்துச் சென்று பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்ந்து பலாத்காரத்தில் ஈடுபட்ட இன்னொரு கான்ஸ்டபிள் தலைமறைவாகி விட்டார்.

இச்சம்பவம் கோட்டை புகையிரதநிலையத்தில் இடம் பெற்றது.

சில தினங்களுக்குமுன் இடம் பெற்ற இச் சம்பவத்தில் குறிப்பிட்ட இளம் பெண்ணின் சங்கிலி ஒன்றும் அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இடமாற்றம் கோரும்ஆசிரியர்

### ஆகஸ்ட் 31க்கு முன்பு விண்ணப்பிக்க

(கொழும்பு)

இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்கள் ஆகஸ்ட் மாதம்31 ஆம்திகதிக்குமுன்னர்விண்ணப்பிக்க வேண்டுமென கல்விச் சேவை ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

வசதி குறைந்த கஷ்டப் பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்களின் வேண்டுகோள்கள் இந்த இடமாற்றத்தின்போது முக்கியமாக கவனிக்கப்படவுள்ளன.

பிரதேச கல்விப்பணிப்பாளர்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் இரண்டு பிரதிகளை பாடசாலை அதிபரின் ஒத்துழைப்புடன் அனுப்ப வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## நவீனசிறுவர்ஆஸ்பத்திரிக்கு சீனா 400 மில்லியன் உதவும்

[கொழும்பு]

நவீன வசதிகள் கொண்ட சிறுவர்களுக்கான வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கு சிறிலங்காவுக்குச் சீனா உதவி வழங்கவுள்ளது. சுமார் 400 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளஇவ்வைத்தியசாலையின் அமைப்பு வேலைகள் யாவும் 1995-ம் ஆண்டில் பூர்த்திசெய்யப்படவுள்ளது. சுகாதார மகளிர் விவகார அமைச்சரின் விசேட வேண்டுகோளின் பேரில் இவ் வைத்தியசாலைக்கான நிதி ஒதுக்கப்படுவதாக கொழும்பில் உள்ள சீனாவின் உதவித் தூதுவர் கூறியுள்ளார்.

### விளையாட்டு

யாழ். வைக்கிங்ஸ் விளையாட்டு கழகத்தினர் தமது இருபந்தைந்து வருடங்கள் பூர்த்தியடைந்ததை கொண்டாடும் முகமாக யாழ். உதைபந்தாட்ட கழகங்களுக்கிடையில் நடாத்திய 9 பேர் கொண்ட உதை பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் பாடுமீன் விளையாட்டு அணியின் இரு பிரிவுகளும் பெனால்டிஉதைமூலம் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தையும், நாவாந்துறை சென்மேரிஸ் அணியையும் தோற்கடித்து முறையே 3-ம், 1-ம் இடங்களை தட்டிக்கொண்டனர்.

மூன்றாம் இடத்தை நிர்ணயிப்பதற்காக நடந்த போட்டியில் குருநகர் பாடுமீன் அணி பாஷையூர் சென் அன்ரனிஸ் ஏ அணியை 6க்கு 5 என்ற கோல் அடிப்படையில் பெனால்டி உதை மூலம் வென்றனர்.

1-ம், 2,ம் இடத்தை நிர்ணயிப்பதற்காக குருநகர் பாடுமீன் ஏ அணிக்கும் நாவாந்துறை சென்மேரிஸ் ஏ அணிக்கும் இடையில் நடந்த விறுவிறுப்பான போட்டியில் இரு அணிகளும் ஆட்டநேரம்வரை தலா 1 கோல்களைப் போட்டதனால் நடுவர்மூவரி ஆட்ட இறுதியில் பெனால்டி உதைகள் மூலம் கோல்கள் போடுமாறு பணிக்கப்பட்டார்கள். பாடுமீன் ஏ அணி 6க்கு 5 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டி கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக கிளிபட் அந்தோனிப்பிள்ளையும், உதவி மத்தியஸ்தராக மு. பிரான்சிஸ், தேவராஜா ஆகியோர் கடமையாற்றினார்கள்.

### தொற்றுநோய்கள் பரவுகின்றன

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தற்போது நெருப்புக் காய்ச்சல், கண்நோய் ஆகியன வேகமாகப் பரவிவருகின்றன. சிறுவர் முதல் பெரியோர்வரை அனைத்துத் தரப்பினரும் இவ்விருநோய்களினாலும் பீடிக்கப்பட்டுள்ளனர்.

(22)

## பொலநறுவை பாலத்தடி சோதனை பற்றி விசாரணை

(பொலநறுவை)

பொலநறுவை - மன்னம்பிட்டி பாலத்திற்கு அப்பால் ஒரு சிலயார் தொலைவிலுள்ள ''தையகெல'' பாலத்திற்கு அருகில் இராணுவ மற்றும் பொலிஸ் சீருடையில் வந்த கோஷ்டி அப்பகுதி வாகனங்களைச் சோதனை நடத்தியதாக தெரியவருகின்றது.

இச்சம்பவம் கடந்த மாதம் 29ஆம் திகதி நடைபெற்றுள்ளது இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸ் வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக தெரியவருகின்றது.

சம்பவ தினத்தன்று இரவு 10 மணியளவில் பிரஸ்தாப வீதியை வழிமறித்து இராணுவச் சீருடை அணிந்த எட்டுப் பேர் மற்றும் இரு பொலிஸ் சீருடை அணிந்த ஒரு கோஷ்டி நடத்தியதாகக் கூறப்படும் மேற்படி சோதனை தொடர்பாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகமும் விபரங்களைச் சேகரித்து வருவதாக அதன் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரஸ்தாப வீதி சோதனை தொடர்பாக அவரிடம் குறிப்பிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டதுடன் இந்தப்பகுதியில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்தினர் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இச்சோதனைகளை நடத்தியவர்கள் விடுதலைப் புலிகளே என தாம் சந்தேகிப்பதாக பொலநறுவைப் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

## ராக்கிங்கை ஒழித்துக்கட்ட நடவடிக்கை வேண்டும்

[மாத்தறை]

தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில் மாத்திரமல்ல; முழு இலங்கை மாணவர் சமூகத்திலுமே ராக்கிங்கை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும்.

இவ்வாறு, காலியில் இடம் பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசும் போது சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்தார்.

நான் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் சேரும் போது இந்த ராக்கிங் சம்பவங்கள் இருந்தன. அதிர்ஷ்டவசமாக எனக்கு அந்த ராக்கிங் நடைபெறவில்லை.

தாதிகள் தொழிலை வேதனம் பெறும் தொழிலாகக்கருதி அத்தொழிலுக்கு யாரும் வருவார்களானால் தயவு செய்து அவர்கள் அத்தொழிலுக்கு வராமல் வீட்டிலேயே இருந்து விடுவது மேல்.

அன்பு, கருணை, தயாளம் நிறைந்த தாதிகளே எமக்குத் தேவை. தாதிகள் தமது பொறுப்புகளை உணர்ந்து சமூகத்திற்கு சேவை செய்யவேண்டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். [தி]

## தந்தையை வெட்டிய மகன் பொலிசாரால் கைது

[மாத்தறை]

படுக்கையில் வைத்து தந்தையை வெட்டிக் கொலை செய்த 13 வயது மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதுபானம் அருந்திவிட்டு, வீட்டிற்கு வந்து துன்புறுத்தும் தந்தையையே மகன் வெட்டிக் கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் உய்வெவ என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

மல்லிகாரச்சிகே கருணாசேன [வயது 42]என்ற தந்தை அன்று வழக்கம்போல மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து' உனது தாயையும் தமையனையும் கொலைசெய்தே தீருவேன் என கொலைச் சந்தேக நபரிடம் கூறிவிட்டு படுக்கைக்குச் சென்றுள்ளார்.

இதையடுத்து தந்தையின் கழுத்தை வெட்டி மகன் கொலை செய்தாராம்.

# பிரேமா கொலை விசாரணை இரகசியங்களை பேணுக!

## சி ஐ டி கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பான விசாரணைகள் இரகசிய மானமுறையிலும், தனிப்பட்ட முறையிலும் வைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று சி. ஐ. டி யினர் நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளனர்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர்உட்பட பதினான்கு சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் அண்மையில்ஆஜர் செய்யப்பட்டபோது சி. ஐ டி யினர்சார்பில் ஆஜரான அரச தரப்புச் சட்டத்தரணி அநுர மெத்தே கொட கேட்டுக் கொண்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;விசாரணையின் முன்னேற்றம் குறித்து இக் கொலை தொடர்பாக விசாரணையை மேற்கொண்டுவரும் சி. ஐ டி யினர் அநேக அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளனர். அநேக சந்தேக நபர்கள் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழும், சிலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் மேலதிகமான அறிக்கை ஒன்றைத் தாக்கல்செய்யும்படி நீதிவான் சி ஐ. டி யினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

# புதைத்துவைக்கப்பட்டிருந்த மூன்று துப்பாக்கிகள் மீட்பு

கம்பளை பகுதியில் உள்ள கோவில் ஒன்றிற்குப் பின்னால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று துப்பாக்கிகளை பொலிசார் மீட்டுள்ளனர்.

மலபார் வீதிக்கருகில் தேடுதல் நடத்திய கம்பளை பொலிசார் மேற்படி துப்பாக்கிகளை மீட்டெடுத்ததாக பொலிஸ் தலைமைக் காரியாலயம் செய்தி வெயிட்டுள்ள போதிலும், அதுபற்றி மேலதிக தகவலை வெளியிட மறுத்துவிட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# தமிழ் மொழி தின போட்டி சிங்களவர்கள் நடுவர்கள்

(கொழும்பு)

தமிழ்மொழித் தினப் போட்டிகளின் போது நடுவர்களாக சிங்களவர்கள் கடமையாற்ற அழைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி சம்பவம் தெல்தெனியா கோட்ட தமிழ் மொழித்தினம்க/உடிஸ்பத்துவ முஸ்லிம் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கோட்டத்தில் உள்ள எந்தவொரு தமிழ்ப் பாடசாலையிலும் தமிழ் மொழிமூலம் சங்கீத, நடன ஆசிரியர்களும் இல்லாமையே இதற்கு காரணமாகும்.

எனவேதான் போட்டியாளர்கள் மத்தியில் பிரச்சினைகள் ஏற்படாதவாறு சிங்கள மொழிமூல மத்தியஸ்தர்கள் அழைககப்பட்டதுடன் தெரிவுகள் இடம்பெற்றநாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

மைலந்தனைப்

வேல், சாட்சிகளான சிவிலியன் 43 பேரும் ஒரே நாளில் மன்றில் ஆஜராக வேண்டியதில்லை என்றும் சாட்சிகளூ வாழைச்சேனையில் இருந்து பொலநறுவைக்கு வருவதில் பல பிரச்சினைகள் இருப்பதாக மன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதனைத் தொடர்ந்து 43 சாட்சிகளில் முதல் சாட்சிக்காரர்கள் பத்துப்பேருக்கு மட்டுமே பிடிவிறாந்து விடுக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தொண்டர் படை இராணுவச் சிப்பாய்கள் 23 பேரும் நீதிமன்றத்திற்கு இராணுவத் தடுப்புக்காவலில் இருந்து ஆஜராக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களான இராணுவத் தொண்டர்படைச் சிப்பாய்கள் சார்பில் சட்டத்தரணி நஜிமுதீன் ஆஜராகினார். ஜனாதிபதி சட்டத்தரணி தயாபெரேரா எதிரிகள் சார்பில் ஆஜராக இருப்

---

அமைய, தற்காலிக

தொழில் புரியும் அமைய, தற்காலிக பதில் பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி தேவையான தகைமைகளை உடையவர்களாக இருப்பின் திறந்த ஆட்சேர்ப்புத் தேர்வுகளுக்குத் தோற்றி வழமையான நடைமுறையின்படி ஆட் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் போட்டித் தேர்வில் பெற்றபுள்ளிகளுடன் பின் வரும் சலுகைப் புள்ளிகளைக் கூட்டுவதற்கு உரித்துடையவர் களாவார்கள் மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்கு 25 வீதம். இரண்டு ஆண்டுச் சேவைக்கு 15 வீதம. ஒரு ஆண்டுச் சேவைக்கு 10 வீதம் பதவிக்குத் தேவையான தகைமை உடையவர்களாக

---

சமையல்பாத்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் அனுசரணையுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நாளை வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு சமையல் பாத்திரங்களை வழங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து கரவெட்டி, உடுப்பிட்டி தேவராணியம், கட்டைவேலி பகுதியில் உள்ள முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு நாளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிட பிரதிநிதி செல்விலூசிஸ்ரேரந்த்இப்பாத்திரங்களை வழங்கவுள்ளார். (நி)

---

சிறுவர் பராமரிப்பு நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நவாலி மயூரன் குடியிருப்பில் தீவகக்கோட்ட மகளிர் அமைப்பினால் அமைக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் திறப்பு விழா 1-ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவில் மங்கள விளக்கினை தீவக அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு செம்மணன் அவர்களும், தேசியக்கொடியினை தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்களும் ஏற்றி வைத்தார்கள் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை -மகளிர் படைப் பிரிவுத் தளபதி செல்வி விதுஷா அவர்கள் திறந்து வைத்தார். [22]

# கரும்புலிகள் நினைவாக சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவாக நேற்று யாழ். குடாநாட்டில் வட்டாரீதியாக பலசிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. போராளிகளும், பொது மக்களும் இச் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். கைதடி வட்டத்தில் ஊரியான்கிராமம் சிரமதானம் மூலம் சுத்திகரிக்கப்பட்டது. பளையில் அரச நகரிலும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வல்வெட்டித்துறையில் பாலம் திருத்தமும், இலந்தைக் காட்டில் வீதி திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது.

தொல்புரத்தில் வீராவத்தை கிராமம் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டது. இருபாலை கிழக்கு கித்துனி கிராமமும் சீர் செய்யப்பட்டது.

# கரும்புலிகள் தின கலை நிகழ்வுகள்

கரும்புலிகள் தினத்தையொட்டி இன்று வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் ஆகிய பகுதிகளில் கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

நாட்டிய நாடகமும், வலிகாமத்தில் விடுதலை தீபங்கள் எனும் நாட்டிய நாடகமும் கரும்புலி வரலாறு எனும் வில்லிசை, நாடகமும், தென்ம

---

இந்தியப் படைகளுடன் போரிட

# காஷ்மீர் தீவிரவாதிகளுடன் ஆபிரிக்க போராளிகள்

[டில்லி]

காஷ்மீரில் உள்ள போராளிக் குழுக்களுடன் மத்தியகிழக்கு, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாதிகளும் தொடர்பு கொண்டுள்ளனர். இவர்கள் காஷ்மீர் தீவிரவாதிகளுடன் இணைந்து கொண்டு இந்தியப் படைகளுக்கு எதிராக போர் புரிந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தான் போராளிக் குழுக்கள் காஷ்மீரினுள் தற்போது வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆப்கான் போரில் அமெரிககா வழங்கிய ஆயுதங்களை இவர்கள் காஷ்மீரினுள் எடுத்து வந்திருப்பதால் இவர்களை ஒடுக்குவது இந்திய இராணுவத்திற்கு கடினமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது,

# அமெரிக்காவின் ஆதிக்கம் ஐ. நா. காண மறுக்கிறது

அமெரிக்கா உலகம் முழுவதிலும் ஆயுத ஆதிக்கம் செலுத்த முனைகின்றது. இதனை ஐ. நா. சபை கண்டும் காணாதது போல் நடந்து கொள்கிறது. இவ்வாறு ஈராக் வெளியுறவு அமைச்சர் அல்-ஹாப் ஐ. நா. பாதுகாப்பு சபையில் தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில்

ஈராக் குற்றச்சாட்டு

மேலும் கூறியதாவது.

அமெரிக்க அதிகாரிகள் குவைத்திலுள்ள தலைவர்களை உடந்தையாக வைத்துக் கொண்டு காரணங்களைத் தேடிப்பிடித்து ஈராக் மீது தாக்குதல் நடத்துவதாகவும் தெரிவித்தார்.

---

வடபகுதிக்கு வரும

# கடிதஉடைப்பு விவகாரம் பி. பி. சி. வெளியிட்டது

(லண்டன்)

யாழ். குடாநாட்டிற்கு அனுப்பப்படும் வெளிநாட்டு தபால்கள் யாவும் உடைக்கப்பட்டு பரிசோதிக்கப்படும் விடயத்தை நேற்று பி. பி. ஸி. சிங்களசேவையாகிய 'சந்தேசிய' வெளியிட்டது.

நேயர் ஒருவர் இது குறித்து எழுதிய கடிதத்தை இவ்வாறு அது ஒலிபரப்பியது.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழும் தமிழ் மக்களின் கடிதங்களை உடைத்து வாசித்தல் அவர்களின் உரிமையை மீறும் செயல் எனவும் சில கடிதங்கள் உடைக்கப்பட்டு உறைகள் மட்டுமே வருவதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

# மாகாணசபை உறுப்பினர் விபத்தில் பலியானார்

(கொழும்பு)

மரண வீடொன்றிற்கு சென்று வீட்டு அதிகாலை வேளையில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மேல் மாகாண சபை சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஜயந்த குணதிலக, மற்றும் வேறு இருவரும் பிரயாணம் செய்த ஜீப் ஆற்றில் பாய்ந்து விபத்திற்குள்ளானதில் பலியாகினர். இச்சம்பவம்கடந்தவாரம் களுத்துறை பனாப்பிட்டிய பகுதியில் நடைபெற்றது. ஜீப்பில் வந்த வேறு இருவர் காயங்களுடன் உயிர் தப்பினர்.

# 'சுதந்திரப் பறவைகள்' இதழ் நாளை வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் ஆடி மாத இதழ் நாளை வெளிவருகிறது. இதில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் ஆய்வுகள் தரும் திடுக்கிடும் தகவல்கள் என்ற தலைப்புச் செய்தியும், ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டம். ஆண்களுக்கு எதிரான போராட்டம் எனும் ஆசிரிய தலையங்கமும், விழிகள் திறக்கின்றன என்ற சிறுகதையும் விளக்கேந்தும் பெருமாட்டிகள் இருளில் வாடுகின்றனர் என்ற கட்டுரையும் மேலும் பல அம்சங்களும் வெளியாகியுள்ளன.

# நடைபாதை வியாபாரிகள் பொலிசாரால் வெளியேற்றம்

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதியில் நடைபாதையில் வர்த்தகம் செய்பவர்களை அண்மையில் பொலிசார் அப்புறப்படுத்தினர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் செல்லச்சாமி கொழும்பு மேயரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். நடைபாதை வியாபாரிகளை அங்கு இருந்து அகற்ற வேண்டாம் எனமேயர் பொலிசாரை கேட்டுக் கொண்டார்.

# வடக்கு-கிழக்கு போரினால் அரசு வங்குரோத்தாகும்

(கொழும்பு)

வடக்கு கிழககு யுத்தத்தினால் சிறிலங்கா அரசாங்கம் மோசமான பொருளாதாரத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த யுத்தம் தொடருமானால் யுத்த,புனர்நிர்மாண செலவுகள் அதிகரித்து அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துவிடும் என பி. பி ஸி.'சந்தேசிப' கொழும்புச் செய்தியாளர் எம். மோ, பர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இன்று யுத்த செலவும் புனர்நிர்மாண செலவும் அதிகரித்துள்ளமையே அரசாங்கம் அறிவித்த சம்பள உயர்வை வழங்க முடியாமற் போனதற்கு காரணம் ஆகும். அத்துடன் இவ் யுத்தத்தால் அரசாங்கம் அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் கூட்டவேண்டியும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் யுத்தம்

# 13000 தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் இல்லை

வாழைச்சேனையில் இருந்து பொலநறுவைக்கு வருவதில பல பிரச்சினைகள் இருப்பதாக மன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதனைத் தொடர்ந்து 43 சாட்சிகளில் முதல் சாட்சிக்காரர்கள் பத்துப்பேருக்கு மட்டுமே பிடிவிறாந்து விடுக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தொண்டர் படை இராணுவச் சிப்பாய்கள் 23 பேரும் நீதிமன்றத்திற்கு இராணுவத் தடுப்புக்காவலில் இருந்து ஆஜராக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களான இராணுவத் தொண்டர்படைச் சிப்பாய்கள் சார்பில் சட்டத்தரணி நஜிமுதீன் ஆஜராகினார். ஜனாதிபதி சட்டத்தரணி தயாபெரேரா எதிரிகள் சார்பில் ஆஜராக இருப்பதாகவும் சட்டத்தரணி நஜிமுதீன் மன்றில் தெரிவித்தார்

இராணுவ சார்பில் சட்டத்தரணி மேஜர் சந்திரகாந்த ஆஜரானார்.

## மட்டக்களப்பில்

இதன்போது கொழும்பிலிருந்து வந்திருந்த பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு விசாரணை பொலநறுவை மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளதால் வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகள் அங்குசென்று துணிந்து சாட்சியமளிக்க பயப்படுகிறார்கள். அகதி முகாம்களில் வசிக்கும் இவர்கள் பொலநறுவை சென்று வருவதற்கு வசதி உள்ளவர்களாகவும் இல்லை என்றும் அத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட்டில் அராலித்துறையில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிறிலங்கா முன்னாள் இராணுவத் தளபதி கொப்பேகடுவ உட்பட பத்து உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டதையடுத்து வஞ்சம் தீர்க்கும் வகையில் சிறிலங்கா இராணுவத்தினர் 39 தமிழர்களை மையலந்தனையில்படுகொலை செய்தது தெரிந்ததே.

## ஹேமா

அநுராதபுரம் சிறீமலபோதி விகாரையில் நடைபெற்ற மத வைபவத்தில் கலந்துகொண்டுவிட்டு பிரமுக்கியஸ்தர்கள் தங்கும் விடுதிக்குச்சென்ற ஹேமா பிரேமதாசாவிற்கு அங்கு அறை எதுவும் வழங்கப்படாமையினால் அவர் உடனடியாகவே திரும்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

...விக்கப்பட்டுள்ளது.

## அமைய, தற்காலிக

தொழில் புரியும் அமைய, தற்காலிக பதில் பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி தேவையான தகைமைகளை உடையவர்களாக இருப்பின் திறந்த ஆட்சேர்ப்புத் தேர்வுகளுக்குத் தோற்றி வழமையான நடைமுறையின்படி ஆட்சேர்க்கப் படுவார்கள். அவர்கள் போட்டித் தேர்வில் பெற்றபுள்ளிகளுடன் பின்வரும் சலுகைப் புள்ளிகளைக் கூட்டுவதற்கு உரித்துடையவர்களாவார்கள் மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்கு 25 வீதம். இரண்டு ஆண்டுச் சேவைக்கு 15 வீதம. ஒரு ஆண்டுச் சேவைக்கு 10 வீதம் பதவிக்குத் தேவையான தகைமை உடையவரல்லாத பணியாளர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவர். கொள்கைத் திட்டமிடல், செயற்படுத்தல் அமைச்சின் அங்கீகாரமின்றி ஊழியர் கோப்பு எல்லைகளுக்கு கூடுதலாகவும், மேலாகவும் ஆட்சேர்ப்புக்கள், மற்றும் நியமனங்கள் தொடர்பாக விசேட அமைச்சரவைத் தீர்மானங்களை மீறும் அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற் கூறிய விடயங்களை பொதுநிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சகல அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## இன்று

விருத்திச் சங்கங்கள், மற்றும் ஏனைய பொது ஸ்தாபனங்கள் ஆகியவை உட்பட பொது மக்கள் கூடும் இடங்கள், வீதிகளின் பிரதான சந்திகள், கேந்திர நிலையங்கள் மற்றும் வீடுகள் போன்றவற்றில் விசேடமாக அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இப்படங்களுக்கு மலர்கள் தூவியும், மலர் மாலைகள் சூடியும் மக்கள் அஞ்சலி செலுத்த உள்ளனர். கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக குடாநாட்டின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் பிரிவு ரீதியாக அஞ்சலிக் கூட்டங்கள் இன்று மாலை நடைபெறவுள்ளது. (க)

# சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவாக நேற்று யாழ். குடாநாட்டில் வட்டாரீதியாக பலசிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. போராளிகளும், பொது மக்களும் இச் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். கைதடி வட்டத்தில் ஊரியான்கிராமம் சிரமதானம் மூலம் சுத்திகரிக்கப்பட்டது. பளையில் அரச நகரிலும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வல்வெட்டித்துறையில் பாலம் திருத்தமும், இலந்தைக் காட்டில் வீதி திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது.

தொல்புரத்தில் வீராவத்தை கிராமம் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டது. இருபாலை கிழக்கு கித்துனி கிராமமும் சீர் செய்யப்பட்டது.

# கரும்புலிகள் தின கலை நிகழ்வுகள்

கரும்புலிகள் தினத்தையொட்டி இன்று வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் ஆகிய பகுதிகளில் கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

வடமராட்சியில் பொதுக் கூட்டமும், கெஞ்சிக்கச்சேரி, நாடுவோம் புதுயுகம் என்ற நாட்டிய நாடகமும், வலிகாமத்தில் விடுதலை தீபங்கள் எனும் நாட்டிய நாடகமும் கரும்புலி வரலாறு எனும் வில்லிசை, நாடகமும். தென்மராட்சியில் நாட்டிய நாடகம், நாடகம் என்பனவும் இடம் பெறவுள்ளன.

# கிளிநொச்சி பகுதியில் எழுச்சி வேலை திட்டங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விநாயகபுரம் - கிருஷ்ணபுரம் இணைப்பு சமூக பொருளாதார சுயவளர்ச்சித் திட்டத்தின் கீழ் எழுச்சி வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன. இதன்கீழ் 50 ஏக்கர் வயலுக்கு நீர் கிடைக்கக்கூடிய குளங்கள் புனரமைப்பு, வீதி புனரமைப்பு. பழமர நடுகை போன்றன தொடர்ந்து நடைபெறுகிறது.

## இளைஞர்

இவர்கள் மலேசியாவில் தொழில் பதிவு அட்டை, விசா போன்றவை இன்மையினால் பொலிசிலும் ஏனைய மறைவிடங்களிலும் வாழும் நிலை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது,

நேற்று முன்தினம் காலை கிருஷ்ணபுரத்தில் அமைக்கப்பட்ட கே. ஆர். பயிற்சி நிலையம். ஆரம்ப சுகாதார நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டன. அரசியல் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், வன்னி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மனோ மற்றும் மாவட்ட அரசியல்பொறுப்பாளர்களும் இதில் கலந்து கொண்டனர். கரிகாலன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் ஆசிரியர்களும் தொண்டர்களும் இத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவர்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 04-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10220

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-6065, 22-5857, 27-9416, 24-5877, 43-4065
22-5622, 27-9030, 24-7084, 22-7271, 27-2034
27-8751, 27-2761, 28-7261, 26-2668, 41-1996
27-0922, 27-8179, 41-8292, 41-3931, 24-5015
41-9355, 26-9992, 42-7975, 24,0917, 24-0951
27-2089, 26-7627, 42-2323, 43-0916, 40-2573
42-9345, 27-1551.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-3429, 24-3594, 24-2024, 41-7563, 41-9995
24-9938, 27-6762, 41-9327, 26-2502, 24-5177
26-8424, 26-8223, 24-9489, 26-0525, 41-5178
24-5955, 28-0248.

...சுட்டிக் காட்டப்பட்டது.

...இதனையடுத்து இவ்விடயம்

...சாரை கேட்டுக் கொண்டார்.

# வடக்கு-கிழக்கு போரினால் அரசு வங்குரோத்தாகும்

(கொழும்பு)

வடக்கு கிழககு யுத்தத்தினால் சிறிலங்கா அரசாங்கம் மோசமான பொருளாதாரத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த யுத்தம் தொடருமானால் யுத்த, புனர்நிர்மாண செலவுகள் அதிகரித்து அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துவிடும் என பி. பி ஸி. 'சந்தேசிப' கொழும்புச் செய்தியாளர் எம். மோ, பர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இன்று யுத்த செலவும் புனர்நிர்மாண செலவும் அதிகரித்துள்ளமையே அரசாங்கம் அறிவித்த சம்பள உயர்வை வழங்க முடியாமற் போனதற்கு காரணம் ஆகும். அத்துடன் இவ் யுத்தத்தால் அரசாங்கம் அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் கூட்டவேண்டியும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் யுத்தம் தொடருமானால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கும் என்று கூறப்பட்டபோதும் அது தொடர்பான திடமான நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை, எனவே ஜனவரியிலாவது சம்பள உயர்வு கிடைக்குமா என்பது சந்தேகமே என அவர் மேலும் தெரிவித்தார்.

# 13000 தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் இல்லை

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்கப்படாமல் இன்னமும் 13 ஆயிரம் பேர் உள்ளதாகவும் இவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி கைத்தொழில் துறை ராஜாங்க அமைச்சர் எஸ் செல்லச்சாமி சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தொண்ட ஆசிரியர்களை நிரந்தரமாக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகள் நடைமுறை சாத்தியமற்றவையாக இருக்கின்றன. உதாரணமாக 1-1-1989தொடக்கம் 31-12-1989வரை ஒரு பாடசாலையில் தொண்டராசிரியராக இருந்த ஒருவருக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற நிபந்தனையைஎடுத்தால் மகப்பேற்று விடுமுறைக்காக நவம்பர் மாதம் பாடசாலைக்கு வருகைதாாதஒருவருக்குக்கூட நிரந்தரநியமனம் மறுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதேபோல் இந்தியப் படையினரின் நடவடிக்கைகளுக்குப் பயந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களைவிட்டு வெளியேறிய தொண்டர் ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இக் குறையைப் போக்க வேண்டுமானால் முந்திய வர்த்தமானி அறிவித்தலை திருத்தி குறைந்தது ஒருவருட காலப்பகுதி சேவை செய்த சகலரையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விண்ணப்பித்த ஆசிரியர்களின்தொகை25ஆயிரம். இவர்களில் 12ஆயிரம்பேர் மட்டுமே வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகுதியானவர்கள்

## குப்பி

போது குப்பிவிளக்குத வறுதலாகதட்டுப்பட்டதால்இவரது உடையில் தீப்பற்றிக் கொண்டது. இதனால் இவரது உடலில் பலத்த எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளன.

எரிகாயங்களுக்குள்ளான இவர் இம்முறை உயர்தர பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபின் அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# கரும்புலி மாவீரர்களுக்கு பல்கலை. மாணவர் அஞ்சலி

தம் இன்னுயிரை தமிழ்மக்களின் விடிவிற்காய் தியாகம் செய்து காற்றோடு காற்றாய் கலந்து மறைந்திட்ட, ஆனால் எம் நினைவுகளில் என்றும் அழியாது நிலையாய் வாழும் கரும்புலி மாவீரர்களுக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் இந்நாளில் சிரம் தாழ்த்தி அஞ்சலி செய்கிறது. இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் அவையினர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேலும் தாம் கொண்ட இலட்சியத்தை இறுதிவரை வெற்றியாய் முடிக்கவேண்டுமென்ற அவாவோடு தம் முயிரை துச்சமென மதித்து வீர மரணத்தை தழுவிக் கொண்ட கரும்புலி மாவீரர்களின் தியாகம் உலக விடுதலைப் போராட்டங்களிற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருப்பது தமிழ் இனத்திற்கே பெரும் பெருமையைத் தேடித்தருவதுடன் தலைமைத்துவம் பற்றிய நம்பிக்கையை உலகெங்கும் பறைசாற்றும் ஒரு செயற்பாடாகவும் அமைகிறது.

இந்தக் கரும்புலிகள் என்றும் நினைவு கூரப்படவேண்டியவர்கள். இவர்களின் தியாகம் மகத்தானது. இத்தகையவீரம் கொண்ட கருமபுலிகள் வாழ்ந்த மண்ணில் எம் கல்வியைத் தொடர்வதனையிட்டு நாம் பெருமிதம் அடைவதுடன், இந்த விடுதலைப்போர் வென்றெடுக்கப்படும்வரை இதே போல் ஆயிரமாயிரம் கருமபுலிகள் எழுவார், வெல்வார் என எது நேரினும் உறுதிகொண்ட மனத்தினராய் திடம்கொண்டு நிற்போம். என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமானநிலைய விஸ்தரிப்பு தமிழ் எம். பி. கண்டனம்

(வவுனியா)

வவுனியாஇராணுவ விமான தளத்தை விரிவாக்க அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு இரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இத்திட்டத்தை உடனடியாக கைவிடுமாறும், 145 தமிழ் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றுவதைக் கைவிடுமாறும் இவர்கள் ஜனாதிபதியை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.